**SET – 4**

**Series : SGN/C**

**Code No. 6**

**Roll No.** | | | | | | | |

Candidates must write the Code on the title page of the answer-book.

- இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற **8** பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும்
- வினாத்தாளில் வலதுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை (Code No.) விடைத்தாளின் தலைப்புப்பக்கத்தில் எழுதவும்.
- இந்த வினாத்தாளில் **9** வினாக்கள் உள்ளனவா எனச்சரி பார்க்கவும்.
- எழுதத் தொடங்குவதற்கும் முன் வரிசை எண்ணைக் குறிப்பிடவும்.
- வினாத்தாளைப் படிப்பதற்கு **15** நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் **10.15** க்குக் கொடுக்கப்படும். **10.15** இல் இருந்து **10.30** வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.
- Please check that this question paper contains **8** printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **9** questions.
- **Please write down the Serial Number of the question before attempting it.**
- 15 minutes time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

# தமிழ்
# TAMIL

*கால அளவு : 3 மணி* | *மொ. மதிப்பெண்கள் : **100***

*Time allowed : 3 Hours* | *Maximum Marks : 100*

பகுதி – அ (50 மதிப்பெண்கள்)

1. (அ) கீழ்வருனவற்றுள் எவையேனும் ஐந்து தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக. 5 × 1 = 5

(i) களனியில் உள்ள கலைகளை நீக்குக.

(ii) மானா மதுரையில் இரவு உரங்கினேன்.

(iii) ஆலயம் தொலுவது சாளவும் நன்று.

(iv) நல்ல மனம் படைத்தவர்களிடம் பணம் இருப்பதில்லை.

(v) வைக்கோள் மாடுகளுக்கு உணவாகிறது.

(vi) பாறையெடுத்துப் பாரையை உடைத்தான்.

(vii) திறந்து கிடக்கும் ஆழ்துலை கிணறுகளை மூடவேண்டும்.

(ஆ) கீழ்வருவனற்றுள் எவையேனும் ஐந்து தொடர்களை வல்லின மெய்யிட்டுத் திருத்துக. : 5 × 1 = 5

(i) புதிய ஆளுநர்க்கு பூச்செண்டு கொடுத்து வாழ்த்தினர்.

(ii) தச்சு தொழில் கற்று கொண்டேன்.

(iii) எட்டு கால் பூச்சியை எப்படி பிடித்தாய்?

(iv) பிள்ளை பெருமாள் ஐய்யங்கார்ப் பற்றி குறிப்பு வரைக.

(v) நல்ல புத்தகங்களை தேடி படிக்கவேண்டும்.

(vi) அடுக்கு தெடருக்கும் இரட்டை கிளவிக்கும் உதாரணம் கொடு.

(vii) கை குட்டையால் முகத்தை துடைத்தான்.

(இ) கீழ் வருவனற்றுள் எவையேனும் ஐந்து தொடர்களைக் கூறியவாறு மாற்றி எழுதுக. **5 × 1 = 5**

(i) தாய்மொழித் தமிழைக் கற்காத தமிழர்கள் இல்லை. (பொருள் மாறாமல் உடன்பாட்டுத் தொடராக்குக.)

(ii) காந்தியை அனைவரும் அறிவர். (எதிர்மறை வினைவாக்கியமாக மாற்றுக.)

(iii) மூவேந்திர்களாலும் தமிழ் வளர்க்கப்பட்டது. (செய்வினைவாக்கியமாக மாற்றுக.)

(iv) நன்றாகப் படிக்க வேண்டும். நல்லமுறையில் தேர்வு எழுத வேண்டும். (கலைவை வாக்கியமாக மாற்றுக.)

(v) தஞ்சை மகனிடம், "நாளை முதல் நீ விடியற்காலையில் எழுந்து படி" என்றார். (அயற் கூற்றாக்குக)

(vi) எங்கள் ஆசிரியர் நன்றாகப் பாடம் கற்பித்தார். (தன் வினையாக மாற்றுக.)

(vii) இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார். (செய்ப்பாட்டு வினைவாக்கியமாக மாற்றுக.)

2. (அ) பின்வரும் பத்தியைப் படித்து அதன் அடியற்கானும் வினாக்களுக்கு விடையளிக்க : **5 × 2 = 10**

சிரிப்பைக் காட்டிலும் சிறந்த மருந்து கிடையாது. இந்தச் சிரிப்பு சூழலுக்கு ஏற்ப பல அர்த்தங்களைக் கற்பிக்கும். மந்திரசக்திக்கும் தந்திரயுக்திக்கும் மேலான ஒரே ஆயுதம் சிரிப்பு. சிரிப்பால் சாதனை புரிந்த சரித்திரங்கள் உண்டு. சிரிப்பால் சீரழிந்த குடும்பங்கள் பல உண்டு. "புகையிலை விரிஞ்சா போச்சு! பொம்பளை சிரிச்சா போச்சு"! "சிரித்தவன் சீரழிவான்!

பொறுத்தவன் பூமி ஆள்வான்”. ‘வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்’. முதலிய பல பழமொழிகள் நமது தினசரி வாழ்க்கையில் பயன்படுத்தப்படுவன. “சிரித்து வாழவேண்டுமே ஒழிய பிறர் சிரிக்க வாழ்ந்திடக் கூடாது”. உள்ளத்தில் பூரிப்பு வருமானால் உதடுகள் சிரிப்பை வெளிப்படுத்தும்” என்று கவிஞர் கண்ணதாசனும், ‘பொன்னும், பொருளும், புகழும், பொழிலும் தந்திடுவது புன்னகை” என்று கவிஞர் வாலியும் இச்சிரிப்பைப் பற்றிப் பாடியுள்ளனர்.

டாக்டர் மதன் கட்டாரியா என்ற மும்பை வாழ் மருத்துவ நிபுணர் 1955-ஆம் ஆண்டு சிரிப்பு யோகசனம் என்பதை ஆரம்பித்தார். சிரிப்பினால் அடைய முடியும் சாதனைகளை உணர்ந்த உலகநாடுகள் அனைத்தும் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் முதல் ஞாயிற்றுக் கிழமையினை ‘உலக சிரிப்பு தினமாகக் கொண்டாடி வருகின்றன. சிரித்து வாழ்பவர்கள் சிந்தனைச் சிற்பிகளாக இருப்பர். சிரிப்புக்கு ஜாதி, மத, இன வேறுபாடுகள் இல்லை. புன்னகை என்பது இறைவன் மனித சமுதாயத்துக் தந்திட ஞானப்பழமாகும். எனவே சிரிக்கப் பழகுவோம். சிறந்து வாழ்வோம்!

**வினாக்கள் :**

(i) சிரிப்புப் பற்றிக் கண்ணதாசன் கூறுவது யாது?

(ii) சிரிப்பு யோகாசனம் எப்போது? யாரால் ஆரம்பிக்கப்பட்டது?

(iii) சிரிப்பைப் பற்றி இருபழமொழிகளை எழுதுக.

(iv) உலக சிரிப்பு தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

(v) இப்பத்திக் கேற்ற தலைப்பொன்றினைக் கொடுக்க.

(ஆ) இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தலைமைத் தேர்தல் ஆணையரை நேர்காணல் செய்க. **5**

அல்லது

பின்வரும் செய்யுளின் அடியிற் காணும் வினாக்களுக்கு விடையளிக்க.

'எண்ணிய முடிதல்வேண்டும்' ;

நல்லவை எண்ணல் வேண்டும்.

திண்ணிய நெஞ்சம் வேண்டும்;

தெளிந்த நல்லறிவு வேண்டும்.

பண்ணிய பாவமெல்லாம்;

பரிதி முன் பனியே போல

நண்ணிய நின்முன் இங்கு

நசித்திடல் வேண்டும் அன்னாய்!

வினாக்கள் :

(i) நம்முடைய எண்ணம் எத்தகையதாக இருத்தல் வேண்டும்? **1**

(ii) எப்படிப்பட்ட நெஞ்சம் இருக்க வேண்டும்? **1**

(iii) அறிவு எத்தகையதாக இருத்தல் வேண்டும்? **1**

(iv) பரிதி – பொருள் தருக. **1**

(v) பண்ணிய பாவம் எதுபோல அழியவேண்டும்? **1**

3. கீழ்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றிக் கட்டுரை வரைக. **10**

(i) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

(ii) அணுவும் ஆக்கமும்

(iii) நதிநீர் இணைப்பு

4. பின்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றிக் கடிதம் எழுதுக. **10**

(i) மழை வெள்ளதால் சீர்குலைந்து போன சாலையைச் செப்பனிட்டுத் தருமாறு பொதுப் பணித்துறை இளநிலைப் பொறியாளர்க்குக் கடிதம் ஒன்று எழுதுக.

(ii) விளையாட்டுப் போட்டியில் வெற்றிப் பெற்ற நண்பனைப் பாராட்டிக் கடிதம் ஒன்று வரைக. (எக்கடிதமாயினும் உம் முகவரி அ. அறிவழகன்/அ. அறிவழகி. 15 தென்றல் தெரு, திருமுல்லை வாயில் எனக்கொள்க.)

**பகுதி-ஆ (50 மதிப்பெண்கள்)**

5. கீழ்வரும் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.

**$2 \times 10 = 20$**

(i) இராமலிங்க அடிகளாரின் சமரசம் குறித்து விளக்குக.

(ii) வயிற்றுப் பெருமான் பொருட்டு மக்கள் செய்வன யாவை?

(iii) பண்டைத் தமிழ்மக்கள் நனிநாகரிகராய் விளக்கியமையும், உயிர்க்குணங்களைப் பற்றி வாழ்ந்தமையும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

(iv) கவிதை இன்னது என்று பேராசரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் வரையறுக்க முயலும் நான்கு கருத்துகளையும் கட்டுரை வடிவில் தருக.

6. கீழ்வரும் செய்யுளின் அடியிற்காணும் வினாக்களுக்கு விடையளிக்க. **5**

“பல்சான்றீரே பல் சான்றீரே

கயன் முள்ளன்ன நரைமுதிர் திரைகவுட்

பயனின் மூப்பிற் பல்சான்றீரே”

(i) இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது? இப்பாடலின் ஆசிரியர் யார்? **1**

(ii) இப்பாடலின் திணை துறைகளை விளக்குக. **2**

(iii) ‘கயன் முள்ளன்ன நரைமுதிர் திரைகவுட்’ பொருள் தருக. **2**

அல்லது

“கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்

தெண்திரை அலைகடல் இலங்கைத் தென்னகர்”

(i) இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது? அதன் ஆசிரியர் யார்? **2**

(ii) கண்டனென் யார்? யாரை? **2**

(iii) இலங்கைத் தென்னகருக்கு உரியவன் யார்? **1**

7. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க?

**2 × 5 = 10**

(i) கண்ணகி சூளுரையும் நகரமாந்தர் மயங்கி உரைத்தனவும் யாவை?

(ii) ‘செய்ந்நன்றி அறிதல்’ அதிகாரத்தின் கீழ் வள்ளுவர் கூறுவன யாவை?

(iii) வேலன் கூறிய எழுச்சியுரையை எடுத்தெழுக.

(iv) இறை வாழ்த்துப் பாடலால் அறியலாகும் செய்திகளைக் கூறுக.

8. ‘பால் வண்ணம் பிள்ளை’ – இச்சிறுகதையை அதன் கருப்பொருளும் எவையும் குன்றாமல் சுருக்கி வரைக. **10**

அல்லது

‘மகன்’ – இச்சிறுகதையை அதன் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

9. ‘மாலதி’ – இக்கதை மாந்தர் பற்றித் திறனாய்க. **5**

அல்லது

‘பூந்தோட்டச் சாமியார்’ – இக்கதை மாந்தர் பற்றித் திறனாய்க.

---